**செய்தி வெளியீடு எண்: 821** **நாள்: 09.11.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

### இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை

பாளையங்கோட்டை மற்றும் சென்னை அரசு சித்த மருத்துவக் கல்லூரிகளில் 2018–2019 ஆம் கல்வியாண்டிற்கான இரண்டரை ஆண்டு கால அளவுள்ள ஒருங்கிணைந்த மருந்தாளுநர் பட்டயப்படிப்பு மற்றும் நர்சிங் தெரபிஸ்ட் பட்டயப் படிப்பு பயில விண்ணபப்பங்கள் **மேல்நிலைப் பள்ளி தேர்வில் முதன் நேர்வில் அறிவியல் பாடங்களை எடுத்து வெற்றி பெற்றவர்களிடமிருந்து 12– 11—2018 அன்று முதல் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

விருப்பமுள்ள நபர்கள் மேற்கண்ட படிப்புகளுக்கான விண்ணப்பம் மற்றும் தகவல் தொகுப்பினை கீழ்க்கண்ட கல்லூரி முதல்வர்களிடமிருந்து ரூ.350/–க்கான (ரூபாய் முந்நூற்று ஐம்பது மட்டும்) இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை–106 (Director of Indian Medicine and Homoeopathy, Chennai-106) என்ற பணியிட பெயரில் **தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஏதேனும் ஒன்றில் பெறப்பட்ட கோடிட்ட வங்கி வரைவோலை கொடுத்து** நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

1. முதல்வர், அரசு சித்த மருத்துவக்கல்லூரி, சென்னை–106
2. முதல்வர், அரசு சித்த மருத்துவக்கல்லூரி, பாளையங்கோட்டை – 627 002
3. முதல்வர், அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, திருமங்கலம், மதுரை மாவட்டம்
4. முதல்வர், அரசு ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி, கோட்டாறு, நாகர்கோயில்
5. முதல்வர், அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக்கல்லூரி, சென்னை–106

தகவல் தொகுப்பேடு மற்றும் விண்ணப்பப் படிவங்களை சுகாதாரத் துறையின் இணைய தளமான www.tnhealth.org இல் இருந்து பதிவிறக்கம் செய்தும் விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தேர்வுக்குழு அலுவலகம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை–106 –ல் சமர்ப்பிக்க கடைசி நாள் **26–11–2018.** மாலை 5.00 மணி வரை மேலும் விவரங்களுக்கு சுகாதாரத் துறையின் இணைய தளமான *www.tnhealth.org* இல் தெரிந்து கொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**